Ceylon College of Physicians | Sri Lanka College of Psychiatrists | Sri Lanka College of Pulmonologists | College of Community Physicians of Sri Lanka | Alcohol and Drug Information Centre | Centre for Combating Tobacco

23 நவம்பர் 2020

**கூட்டு செய்தி வெளியீடு: புகையிலை வரியை உயர்த்தி, இலங்கையின் சுகாதாரத்தையும் பொருளாதாரத்தையும் காப்பாற்றுங்கள்!**

புகையிலை அதன் நுகர்வோரில் 50% ஆனோரையும் ஆண்டுக்கு 20,000 இலங்கையர்களையும் அகால மரணமடையச் செய்கிறது. இது தனிநபர், வீட்டு மற்றும் சமூக மட்டங்களில் வறுமையை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும், இது ஊட்டச்சத்துக் குறைப்பாடு மற்றும் குறைந்த பொருளாதார உற்பத்தித்திறன் ஆகியவற்றின் பாதகமான சுழற்சிகளுக்கு பங்களிக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனம்(WHO) புகைப்பொருள் பாவனை மற்றும் COVID-19 இன் கடுமையான பாதிப்புகளுக்கு இடையிலான தொடர்பை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது, இதில் புகைப்பொருள் பாவனை இறப்புக்கான ஆபத்தை அதிகரிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, ஒரு "மக்கள் நட்பு" அரசாங்கம் தனது குடிமக்களை COVID-19 இலிருந்து காப்பாற்றுவதற்காக மட்டுமல்லாமல், தனிநபர், வீட்டு மற்றும் சமூகத்தை புகையிலை தொடர்பான சுகாதார, பொருளாதார மற்றும் சமூக விளைவுகளைத் தடுப்பதற்கு, புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கடுமையாக்குவதற்கான சரியான நேரம் இது.

புகையிலை வரியை உயர்த்துவது உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான சட்டவாக்கத்தின் (FCTC) கீழ் பரிந்துரைக்கப்பட்ட ஆறு ஆதாரப்பூர்வமான உத்திகளில் ஒன்றாகும், இது புகையிலையை கட்டுப்படுத்துவதற்கான உலகளாவிய ஒப்பந்தமாகும், இதில் இலங்கை 2003 முதல் ஒரு பங்காளர் நாடாகும். 2020ம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளில் இது தெளிவாகப் பயன்படுத்தப்படாத உத்திகளில் ஒன்றாகும் என்றாலும், வரியை உயர்த்துவது அரசாங்கங்களுக்கு ஒரு சக்திவாய்ந்த, பயனுள்ள மற்றும் வெற்றிகரமான உத்தி என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டின் குடிமக்களை புகைப்பொருளில் இருந்து பாதுகாப்பதோடு அரசாங்க வரி வருவாயையும் அதிகரிக்கிறது. புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரச் சபை FCTC, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இலங்கைக்கான WHO அலுவலகம் ஆகியோரால் 2016 ஆம் ஆண்டில் புகையிலை கட்டுப்பாட்டுக்கான முதலீடுகள் குறித்த ஆய்வின்படி, புகையிலை வரி முறையாக அதிகரிக்கப்பட்டால், அந்த முதலீட்டின் வருமானம் 724 மடங்காக இருக்கும். அதாவது, அரசாங்கம் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 724 ரூபாய் அரசுக்குத் திருப்பிக் கிடைக்கும் என்று கண்டறியப்பட்டது. இலங்கையின் கொள்கை ஆய்வுகள் நிறுவனம் (IPS) சமீபத்தில் நடத்திய ஆய்விற்கு அமைய, விஞ்ஞான அடிப்படையிலான நான்கு கட்டங்களாக புகையிலை வரியை அதிகரிப்பதானது அடுத்த நான்கு ஆண்டுகளில் (2020 - 2023) அரசாங்க வருவாயை ரூபா 37 பில்லியன்களால் அதிகரிக்கும், புகைப்பிடித்தலானது 12.5% ஐ விட குறைவடையும் (தற்போதைய 18% இலிருந்து) மேலும் குறைந்தது 141,391 இலங்கையர்களை அகால மரணத்திலிருந்து காப்பாற்றலாம் என கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையில் பொது சுகாதாரம் மற்றும் புகையிலை கட்டுபாட்டுக்காக செயற்படுபவர்களாக, இலங்கை அரசாங்கத்தை ஒரு சான்று அடிப்படையிலான பயனுள்ள வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். புகையிலை வரியை அதிகரித்தும், புகையிலை கொள்வனவுக்கான இலகுத்தன்மையை அதிகரித்தும் கொவிட் 19 மற்றும் புகையிலை பாவனையால் ஏற்படும் அகால மரணத்தை தடுத்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.